**இந்திய உச்ச நீதிமன்றம்**

**உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு**

**உரிமையியல் மேல்முறையீடு எண்கள்** *1167 & 1170/2023*

எஸ். முரளி சுந்தரம் ... மேல்முறையீட்டாளர்

*-எதிர்-*

ஜோதிபாய் கண்ணன் மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

## தீர்ப்புரை

**மாண்புமிகு நீதியரசர் திரு. எம். ஆர். ஷா:**

*1.* சென்னை உயர் நீதிமன்ற மதுரை அமர்வால் மறுஆய்வு மனு *(எம்.டி)* எண் *21/2017*-இல் பிறப்பிக்கப்பட்ட *29.06.2021*-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவாலும், நீதிப்பேராணை மனு *(எம்.டி.)* எண் *14847/2017* மற்றும் நீதிப்பேராணை மனு எண் *16256/2017*-இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளாலும், அவமதிப்பு மனு *(எம்.டி.)* எண் *1109/2017*-இன் உத்தரவாலும் உயர் நீதிமன்றம் மறுஆய்வு அதிகாரவரம்பைப் பயன்படுத்தி மறுஆய்வு எண் *21/2017*-ஐ அனுமதித்து, நீதிப்பேராணை மனு *(எம்.டி.)* எண் *8606/2010*-இல் பிறப்பித்த உத்தரவை நீக்கறவு செய்ததால், அதில் அதிருப்தியுற்றும், மனக்குறையுற்றும், நீதிப்பேராணை மனு எண் *8606/2010*-இன் முதன்மை நீதிப்பேராணை மனுதாரர் தற்போதைய மேல்முறையீடுகளைத் தாக்கல் செய்துள்ளார்.

*2.* தற்போதைய மேல்முறையீடுகளில் தொடர்புடைய பிரச்சினை மிக சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

2.1. திருச்சிராப்பள்ளி வட்டம் மற்றும் மாவட்டம், புதிய சர்வே எண் 43, வார்டு 42, பிளாக் ஏ.ஜி.15, இந்தியன் வங்கி காலனி, சிம்கோ மீட்டர் சாலை, திருச்சிராப்பள்ளியில் உள்ள வழிப்பாதை தொடர்பாக 17.7.2008 அன்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சியால் பிறப்பிக்கப்பட்ட ஆணையால் அதிருப்தியடைந்து, மனக்குறையுற்ற இதிலுள்ள மேல்முறையீட்டாளர், நீதிப்பேராணை மனு (எம்.டி.) எண் 8606/2010-ஐ உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். உயர் நீதிமன்றத்திலுள்ள மறுஆய்வு மனுதாரர்களான இங்குள்ள எதிர்மேல்முறையீட்டாளர்கள் நில அளவைத் துறையின் அறிக்கையின் மீதும், நில அளவை அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள அளவீடுகளையும் பெரிதும் சார்ந்துநின்றன. எனினும், உயர் நீதிமன்றம் நில அளவை அறிக்கையை நிராகரித்து, மற்ற இரு அறிக்கைகளை சார்வுற விரும்பியது, அதனைத் தொடர்ந்து, 3.3.2017-ஆம் தேதியிடப்பட்ட விரிவான தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மூலம் நீதிப்பேராணைகளை அனுமதித்தது.

2.2. அதன்பிறகு, மறுஆய்வு விண்ணப்பதாரர்களான இதிலுள்ள எதிர்மேல்முறையீட்டாளர்கள் உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908, (இதில் இதற்குப்பிறகு உ.ந.ச. எனக் குறிப்பிடப்படும்) கட்டளை 47, விதி 1-இன் கீழ் நீதிப்பேராணை மனு (எம்.டி.) எண் 8606/2010-இல் தற்போதைய மறுஆய்வு மனு (எம்.டி.) எண் 21/2017-ஐ தாக்கல் செய்தனர். எஸ்.எம். கஜேந்திரன் என்பவர் ந.க. எண் 5293/எ.4/2017-இல் விசாரணையில் 3.7.2017-இன் தேதியிடப்பட்ட உத்தரவையையும், ந.க. எண் 10048/2016/எ.ஃப்.1-இன் விசாரணையின் 9.6.2017-ஆம் தேதியிடப்பட்ட ஆணையையும் எதிர்த்து, நகராட்சி சார்பாக ஏழு பொது சாலைகளைப் பதிவுசெய்து நகராட்சிக்கு ஆதரவாக கொடையளித்து,

நிறைவேற்றப்பட்ட அறுதியாவணத்தை ஏற்க எதிர்மேல்முறையீட்டாளர்களைப் பணிக்குமாறு கோரி நீதிப்பேராணை மனு எண் 14847/2017-ஐயும் நீதிப்பேராணை மனு எண் 16256/2017-ஐயும் தாக்கல்செய்தார். உயர் நீதிமன்றம், ஏதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மூலம் மறுஆய்வு மனு (எம்.டி.) எண் 21/2017-ஐ அனுமதித்து, நீதிப்பேராணை மனு எண் 8606/2010-இல் பிறப்பிக்கப்பட்ட 3.3.2017-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவை நீக்கறவு செய்துள்ளது. இதனைத் தொடர்ந்து, உயர் நீதிமன்றம், எஸ்.எம். கஜேந்திரனால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு எண்கள் 14847/2017 மற்றும் 16256/2017-ஐ தள்ளுபடி செய்துள்ளது. இதன்விளைவாக, உயர் நீதிமன்றம் அவமதிப்பு மனு எண் 1109/2017-ஐயும் தள்ளுபடி செய்துள்ளது. உயர் நீதிமன்றம் முக்கியமாக மறுஆய்வு மனுவை அனுமதித்து, பிறப்பித்த எதிர்ப்புக்குள்ளான பொதுவான தீர்ப்புரை மற்றும் உத்தரவே தற்போதைய மேல்முறையீடுகளின் வழக்குப்பொருளாகும்.

2.3. உயர் நீதிமன்றம், வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, மறுஆய்வு விண்ணப்பத்தை அனுமதித்ததில் தவறிழைத்துவிட்டது, முக்கியமாக நீதிப்பேராணை மனு எண் 8606/2010-இல் பிறப்பிக்கப்பட்ட 3.3.2017-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவை செல்லாததாக்கி நீக்கறவு செய்துள்ளது என மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு.வி. பிரபாகர் முனைப்புடன் வாதிட்டார்.

2.4. மேலும், உயர் நீதிமன்றம், முதன்மை நீதிப்பேராணை மனுவில் பிறப்பித்த உத்தரவை செல்லாததாக்கி, நீக்கறவு செய்கையில், மறுஆய்வு விண்ணப்பத்தை அனுமதித்து, தீர்மானிக்கும்போது தனது அதிகாரவரம்பை

மீறியுள்ளது என்று மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞரால் பணிந்துரைக்கப்படுகிறது.

*2.5.* உயர் நீதிமன்றம் மறுஆய்வு விண்ணப்பத்தை அனுமதிக்கையில், அதற்கு வழங்கப்படாத அதிகாரவரம்பைப் பயன்படுத்தி மறுஆய்வு விண்ணப்பத்தைத் தீர்மானித்து தனது அதிகாரவரம்பை மீறிவிட்டது என்றும் மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞரால் மேலும் பணிந்துரைக்கப்படுகிறது.

*2.6.* நீதிப்பேராணை மனு எண் *8606/2010*-இல் *3.3.2017*-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மீது உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டு அதிகாரவரம்பை பயன்படுத்துவதுபோன்று மறுஆய்வு அதிகாரவரம்பை பயன்படுத்தியுள்ளது, இது முற்றிலும் அனுமதிக்கத்தகாதது என்றும் மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞரால் மேலும் வாதிடப்படுகிறது. **பெரி கன்சக்ரா -எதிர்- ஸ்மிருதி மதன் கன்சக்ரா,** *(2019) 20* **எஸ்.சி.சி.** *753* **மற்றும் சாந்தி கண்டக்டர்ஸ் (பி) லிமிடெட் -எதிர்- அசாம் எஸ்.இ.பி.,** *(2020) 2* **எஸ்.சி.சி.** *677* என்ற வழக்குகளின் தீர்முடிவுகளின் மீது சார்வுறப்பட்டுள்ளது.

*2.7.* உயர் நீதிமன்றம் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையில் அவ்வாறு கருத்துரைத்ததன்படி பார்த்தால், நீதிப்பேராணை மனு எண் *8606/2010*-இல் பிறப்பிக்கப்பட்ட *3.3.2017*-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவு பிழையானது என்றும் மேல்முறையீட்டாளரின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் மேலும் வாதிடுகிறார். எனினும், ஒரு பிழையான உத்தரவு மறுஆய்வின் விடயப்பொருளாக இருக்கமுடியாது என்றும், பிழையான உத்தரவாக இருந்தாலும், மறுஆய்வு அதிகாரவரம்பை பயன்படுத்தி அதனை நீக்கறவு செய்யமுடியாது என்றும்

பணிந்துரைக்கப்படுகிறது. தற்போதைய வழக்கில் மறுஆய்வு விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டதற்கான அனைத்து காரணங்களும் மறுஆய்வு விண்ணப்பம் அனுமதிக்கப்பட்டதற்கான காரணங்களும், உயர் நீதிமன்றத்தால் நீதிப்பேராணை மனுவானது தீர்மானிக்கப்படுவதுபோன்று, ஆய்வு செய்யப்பட்டு பரிசீலிக்கப்பட்டது என்றும் வாதுரைக்கப்படுகிறது. எனவே, பதிவாவணத்தில் வெளிப்படையான பிழையேதுமில்லை மற்றும்/அல்லது மறுஆய்வு அதிகாரவரம்பை பயன்படுத்தி திருத்தப்படக்கூடிய தவறும் பதிவாவணத்தில் வெளிப்படையாக ஏதுமில்லை என்றும் பணிந்துரைக்கப்படுகிறது.

மேற்படி வாதங்கள் செய்தும், மேற்படி தீர்முடிவுகளை சார்ந்துநின்றும், தற்போதைய மேல்முறையீடுகளை அனுமதிக்குமாறு வேண்டுரைக்கப்பட்டுள்ளது.

3. தற்போதைய மேல்முறையீடுகள் எதிர்மேல்முறையீட்டாளர்களான முதன்மை மறுஆய்வு விண்ணப்பதாரர்கள் சார்பாக முன்னிலையாகும் கற்றறிந்த வழக்குரைஞர் திருமதி/செல்வி. உறரிபிரியா பத்மநாபன் அவர்களால் கடுமையாக எதிர்க்கப்படுகிறது. நீதிப்பேராணை மனு எண் 8606/2010-ஐ தீர்மானிக்கும்போது, உயர் நீதிமன்றம் நில அளவை அறிக்கைகளைத் தவறாகப் புறந்தள்ளி, தனியார் அறிக்கைகள் மீது சார்வுற்றது என்று மறுஆய்வு விண்ணப்பதாரர்கள் சார்பில் முன்னிலையாகும் கற்றறிந்த வழக்குரைஞரால் வலுவாக சமர்ப்பிக்கப்படுகிறது. முதன்மை நீதிப்பேராணை மனுதாரரும், எஸ்.எம். கஜேந்திரனும் போலியான அறிக்கைகளின்/ஆவணங்களின் மீது சார்ந்துநின்றதால், அவர்களால் மோசடி புரியப்பட்டதாக பணிந்துரைக்கப்படுகிறது. ஆகவே, இந்நீதிமன்றம் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 136-இன் கீழ் அதிகாரங்களைச் செலுத்தலாகாது எனப் பணிந்துரைக்கப்படுகிறது.

உயர் நீதிமன்றம், நீதிப்பேராணை மனு எண் 8606/2010-இல் பிறப்பிக்கப்பட்ட முந்தைய தீர்ப்பு, பிழையானது எனக் கண்டறிந்தது என்றும், ஆகவே, உயர் நீதிமன்றம் நீதிப்பேராணை மனு எண் 8606/2010-இல் பிறப்பிக்கப்பட்ட 3.3.2017-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவை நீக்கறவு செய்ததில் நியாயப்படுத்தப்படுகிறது என்றும் பணிந்துரைக்கப்படுகிறது.

மேற்கண்ட வாதங்களை முன்வைத்து, தற்போதைய மேல்முறையீடுகளைத் தள்ளுபடி செய்ய வேண்டுரைக்கப்படுகிறது.

4. நாங்கள் சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர்களின் விரிவான வாதங்களைக் கேட்டோம்.

5. ஆரம்பத்தில் உயர் நீதிமன்றம் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மூலம், உ.ந.ச., கட்டளை 47, விதி 1-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மறுஆய்வு விண்ணப்பத்தை அனுமதித்து, நீதிப்பேராணை மனு எண் 8606/2010-இல் பிறப்பிக்கப்பட்ட 3.3.2017-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவை நீக்கறவு செய்துள்ளது என்பதை ஆரம்பத்திலே குறிப்பிடப்படவேண்டியுள்ளது. மறுஆய்வு விண்ணப்பத்தை அனுமதிக்கையில், நீதிப்பேராணை மனு எண் 8606/2010-இல் 3.3.2017-ஆம் தேதியிடப்பட்ட முந்தைய தீர்ப்புரை மற்றும் உத்தரவு பிழையானது என உயர் நீதிமன்றம் கருத்துரைத்து தீர்மானித்தது, ஆகவே, இந்நீதிமன்றத்தின் முன்பாக பரிசீலனைக்காக எழுப்பப்பட்ட கேள்வி யாதென்றால், வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, உ.ந.ச., கட்டளை 47, விதி 1-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மறுஆய்வு விண்ணப்பத்தை அனுமதித்ததிலும், முதன்மை நீதிப்பேராணை மனுவில்

பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவை நீக்கறவு செய்ததிலும் உயர் நீதிமன்றம் நியாயப்படுத்தப்படுகிறதா? என்பதாகும்.

5.1. மேற்கண்ட பிரச்சினையை பரிசீலிக்கையில், இந்நீதிமன்றம், உ.ந.ச., கட்டளை 47, விதி 1-உடன் பிரிவு 114-இன் அடிப்படையில் எடுத்த இரு தீர்முடிவுகள் குறிப்பிடப்பட வேண்டியவையா? இந்நீதிமன்றம், உ.ந.ச., கட்டளை 47, விதி 1 உடன் பிரிவு 114-இன் கீழ் ஒரு விண்ணப்பத்தில் மறுஆய்வு அதிகாரவரம்பை செலுத்துகையில், மறுஆய்வு நீதிமன்றம் அதனுடைய தீர்ப்பின் மீதான மேல்முறையீட்டு வழக்கை விசாரிக்க அமருவதில்லை என (மேற்கண்ட) **பெரி கன்சக்ரா** என்ற வழக்கில் இந்நீதிமன்றம் கருத்துரைத்துள்ளது. வழக்கை மறு விசாரணை செய்வது சட்டத்தில் அனுமதிக்கத்தக்கதல்ல என்று கருத்துரைக்கப்படுகிறது. மறுஆய்வு என்பது மறைமுக மேல்முறையீடு போன்றதல்ல என்று மேலும் கருத்துரைக்கப்படுகிறது. ஒரு தவறை சரிசெய்வதற்காக மறுஆய்வு அதிகாரத்தை பயன்படுத்தலாமேயன்றி ஒரு கருத்தை மாற்றியமைப்பதற்காக அல்ல. அத்தகைய அதிகாரங்களை செலுத்துவதைக் குறித்து விவாதிக்கும் சட்டவரம்புகளுக்குட்பட்டே பயன்படுத்தமுடியும். இறுதியாக, முரண்பாடானது தீர்மானிக்கப்பட்டுள்ள தீர்ப்புரையை மீண்டும் எழுதும் மனப்பாங்கை வெளிப்படுத்துகிறது; அது முற்றிலும் நியாயமற்றது என மேலும் கருத்து தெரிவிக்கப்படுகிறது. உ.ந.ச., கட்டளை 47, விதி 1-இன் கீழ் மறுஆய்வு அதிகாரங்களை செலுத்துவதன்பேரிலும், மறுஆய்வு அதிகாரவரம்பை பயன்படுத்துவது தொடர்பான கோட்பாடுகளின்பேரிலும் தொடர் தீர்முடிவுகளை பரிசீலித்தப் பிறகு, இந்நீதிமன்றம் சுருக்கமாகக் கூறியுள்ளதாவது:

"(i) மறுஆய்வு நடவடிக்கைகள் மேல்முறையீடு வாயிலானதன்றி அவை கண்டிப்பாக உ.ந.ச., கட்டளை 47, விதி 1-இன் நோக்கெல்லை மற்றும் வரம்பிற்குட்படுத்தப்பட வேண்டும்.

(ii) பதிவாவணத்தில் வெளிப்படையான குறிப்பிட்ட தவறு அல்லது பிழை காணப்படும்போது மறுஆய்வு அதிகாரத்தை பயன்படுத்தலாம். ஆனால் பதிவாவணத்திலுள்ள வெளிப்படையான பிழை, பதிவாவணத்தைப் பார்த்தமாத்திரத்திலேயே தெரியக்கூடிய பிழையாக இருக்கவேண்டும், மேலும், இருவேறு கருத்துகளால் உருவாகக்கூடிய விடயங்களின் அடிப்படையில் காரணவிளக்கமளிக்க வரையறையின்றி நீண்டுசெல்லும் நடைமுறை எதுவும் தேவையில்லை.

(iii) நற்கூறுகளின்பேரிலான இந்தத் தீர்முடிவு பிழையானது என்ற அடிப்படையில் மறுஆய்வு அதிகாரத்தைப் பயன்படுத்தப்படலாகாது.

(iv) ஒரு நீதிமன்றத்தால் அல்லது வழக்குரைஞராலுங்கூட சங்கதி அல்லது சட்டம் குறித்த தவறான கருத்தெடுக்கப்பட்டு, அக்கருத்தை உள்ளிணைக்கும் அளவுக்கு போதுமான காரணமேதுமிருந்தால், மறுஆய்வு அதிகாரத்தை பயன்படுத்திக்கொள்ளலாம்.

(v) நீதிமன்ற நடவடிக்கை எவருக்கும் கெடுதல் விளைவித்தல் ஆகாது என்ற கோட்பாட்டின் உதவியுடன் மறுஆய்வுக்கான விண்ணப்பத்தைக் கட்டாயப்படுத்தலாம்."

5.2. மேலும், காரணவிளக்க முறையின் மூலமாக கண்டறியப்படவேண்டிய ஒரு பிழையை, பதிவாவணத்திலுள்ள வெளிப்படையான பிழை எனக் கூறப்படமுடியாது என மேற்படி தீர்முடிவில் கருத்துரைக்கப்படுகிறது.

5.3. உ.ந.ச., கட்டளை 47, விதி 1 உடன் பிரிவு 114-இன் கீழான மறுஆய்வு வரம்பானது வரையரைக்குட்பட்டதாகும் என்றும், ஏற்கெனவே விவாதிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டுள்ள பிரச்சினைகளை மறுஆய்வு என்ற போர்வையின் கீழ் மறுஆய்வு செய்யவும், மறு விவாதம் செய்யவும் மனுதாரர் அனுமதிக்கப்படமுடியாது என்றும், (மேற்படி) **சாந்தி கண்டக்டர்கள் (பி) லிமிடெட்** என்ற வழக்கில் கருத்துரைத்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேலும், தானாகவே புலப்படாமல், காரணமுறையால் கண்டறியபடவேண்டியுள்ள ஒரு பிழையானது உ.ந.ச., கட்டளை 47, விதி 1-இன் கீழ் நீதிமன்றம் தனது மறுஆய்வு அதிகாரத்தை பயன்படுத்துவதை நியாயப்படுத்தி, அது பதிவாவணத்திலுள்ள வெளிப்படையான பிழை எனக் கூறப்படமுடியாது.

5.3. மேற்சொன்ன இரண்டு தீர்ப்புரைகளில் இந்நீதிமன்றத்தால் வகுத்துரைக்கப்பட்டுள்ள சட்டத்தை கையிலுள்ள வழக்கின் சங்கதிகளுக்கு பொருத்திப்பார்த்தால், தற்போதைய வழக்கில் மறுஆய்வு விண்ணப்பத்தை அனுமதித்து, நீதிப்பேராணை மனு எண் 8606/2010-இல் வழங்கப்பட்ட 3.3.2017-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவை நீக்கறவு செய்கையில்,

உயர் நீதிமன்றம், உ.ந.ச., கட்டளை 47, விதி 1 உடன் பிரிவு 114-இன் கீழ் மறுஆய்வு அதிகாரவரம்பை பயன்படுத்துகையில், தனது அதிகாரவரம்பை மீறியுள்ளதோடு தன்னிடம் வழங்கப்படாத அதிகாரவரம்பை பயன்படுத்தியுள்ளது என்று நாங்கள் கருதுகிறோம். உயர் நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்ட காரணவிளக்கத்திலிருந்து, உயர் நீதிமன்றத்தின் கூற்றின்படி நீதிப்பேராணை மனு எண் 8606/2010-இல் வழங்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவு பிழையானவையாகத் தெரிகிறது; உயர் நீதிமன்றம் முதன்மை நீதிப்பேராணை மனுவைத் தீர்மானிக்கையில் ஏற்கெனவே விவாதித்து, நிராகரித்த மற்றும்/அல்லது பரிசீலிக்காத 12.12.2007-ஆம் தேதியிடப்பட்ட நில அளவை அறிக்கையைப் பரிசீலித்து கருத்துரைத்துள்ளது, ஆனால், உயர் நீதிமன்றம் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவைப் பிறப்பிக்கையில் பரிசிலித்துள்ளது. 12.12.2007-ஆம் தேதியிடப்பட்ட நில அளவை அறிக்கையை உயர் நீதிமன்றம் முதன்மை நீதிப்பேராணை மனுவைத் தீர்மானிக்கையில், அதன் முன்பாக 12.12.2007-ஆம் தேதியிடப்பட்ட நில அளவை அறிக்கை பரிசீலனைக்காக வந்துவிட்டதால், அதன்பின்னர், உயர் நீதிமன்றம் மறுஆய்வு விண்ணப்பத்தை தீர்மானிக்கையில் அது பரிசீலிக்கப்பட்டிருக்ககூடாது.

5.4. நீதிப்பேராணை மனு எண் 8606/2010-இல் வழங்கப்பட்ட 3.3.2017-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிற்கெதிரான மேல்முறையீட்டு அதிகாரவரம்பை செயல்படுத்துவதுபோன்று, மறுஆய்வு விண்ணப்பத்தைத் தீர்மானித்துள்ளதாக உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து தெரிகிறது, அது, உ.ந.ச., கட்டளை 47, விதி 1 உடன் பிரிவு 114-இன் கீழ் மறுஆய்வு விண்ணப்பத்தைப் பரிசீலிக்கையில் முற்றிலும் அனுமதிக்கத்தக்கதல்ல.

5.5. மறுஆய்வு விண்ணப்பத்தை அனுமதித்து, உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவின் பத்தி 33-இல் கீழ்க்காணுமாறு கருத்துரைக்கப்படுகிறது:

> "33. மறுஆய்வு விண்ணப்பத்தைப் பரிசீலிக்கையில் மேற்படியான சட்டக் கோட்பாடுகள் இந்நீதிமன்றத்தால் கருத்தில் கொள்ளப்பட்டன. பதிவிலுள்ள நில அளவை அறிக்கையைப் புறந்தள்ளியதும், அலுவல்முறை பதிவாவணங்களில் இடைமாற்றம் செய்யப்பட்டதையும், நீதிப்பேராணை மனுவில் கோரப்பட்ட வேண்டுரையைப் பரிசீலிக்கும்போது அறிவார்ந்த நீதிப்பேராணை நீதிமன்றத்தால் குறித்துக்கொள்ளப்பட்டிருக்கவேண்டும். இது உத்தரவின் முகப்பிலேயே வெளிப்படையாக தெரியக்கூடிய ஒரு பிழைக்கு வழிகோலியுள்ளது. எஸ்.எம். கஜேந்திரன் ஒரு கொடையாவணம் நிறைவேற்றியிருந்தார். சங்கதி யாதெனில், அக்கொடை ஆவணமானது ஒரு தரப்பாக நிறைவேற்றப்பட்டு எதிர்மேல்முறையீட்டாளர் மாநகராட்சியால் ஏற்கப்படாத ஆவணமாகும் மற்றும் அது செல்லதக்க கொடையாகக் கருதப்பட்டிருக்கமுடியாது என்ற அடிப்படையில் உயர் நீதிமன்றம் வழக்கை நடத்தியது. இச்சங்கதிகள், வரையறையற்ற நீண்ட காரணவிளக்கத்திற்கான தேவை

ஏதுமின்றி, நீதிப்பேராணை மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் வெளிவந்துள்ளன. ஆகவே, நாங்கள், எங்களுடைய மறுஆய்வு அதிகாரவரம்பை நியாயமாகப் பயன்படுத்தியுள்ளோம் என்பதில் முழுமையாக திருப்தியடைகிறோம். மேற்கண்ட காரணங்களுக்காக நீதிப்பேராணை மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, மறுஆய்வு அதிகாரவரம்பை பயன்படுத்தக் கோரும் பதிவாவணங்களிலுள்ள வெளிப்படையான பிழையால் பாதிக்கப்பட்டுள்ளது என நாங்கள் தெளிவாகக் கருதுகிறோம்."

5.6. மேற்சொன்னவற்றிலிருந்து நீதிப்பேராணை மனு எண் 8606/2010-இல் உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் மீதான மேல்முறையீட்டைப்போன்று மறுஆய்வு விண்ணப்பத்தை உயர் நீதிமன்றம் பரிசீலித்துள்ளதாகத் தெரிகிறது. இதில் இதற்குமேலே கருத்துரைக்கப்பட்டவாறு, மறுஆய்வு விண்ணப்பத்தைத் தீர்வு செய்கையில் அது முற்றிலும் அனுமதிக்கப்படாது. மறுஆய்வு செய்யப்படவேண்டிய தீர்ப்புரை பிழையானதாக இருந்தாலும், அது, உ.ந.ச., கட்டளை 47, விதி 1-இன் கீழான அதிகாரங்களை பயன்படுத்தி மறுஆய்வு செய்வதற்கான காரணமாக இருக்கமுடியாது. ஒரு பிழையான உத்தரவு உயர்/உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதற்குட்படுத்தப்படலாம். ஆனால், அது உ.ந.ச., கட்டளை 47, விதி 1-இன் கீழ் மறுஆய்வுக்கான வழக்குப்பொருளாக இருக்கமுடியாது.

6. மேற்படியானவற்றைக் கருத்திற்கொண்டு, மேற்சொன்ன காரணங்களுக்காகவும், உ.ந.ச., கட்டளை 47, விதி 1 உடன் பிரிவு 114-இன் அடிப்படையில், இந்நீதிமன்றத்தால் வகுத்துரைக்கப்பட்டுள்ள சட்டத்தைப் பொருத்திப் பார்த்தால், தற்போதைய வழக்கில் உயர் நீதிமன்றம் மறுஆய்வு விண்ணப்பத்தை அனுமதிக்கையில் அதன் அதிகாரவரம்பை மீறி உ.ந.ச., கட்டளை 47, விதி 1 உடன் பிரிவு 114-இன் கீழ் அதனிடம் வழங்கப்படாத அதிகாரவரம்பை பயன்படுத்தியுள்ளதென, நாங்கள் கருதுகிறோம். ஆகவே, நீதிப்பேராணை மனு எண் 8606/2010-இல் பிறப்பிக்கப்பட்ட 3.3.2007-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவை நீக்கறவு செய்து, மறுஆய்வு விண்ணப்பத்தை அனுமதித்து உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவு நிலைநிறுத்தத்தக்கதல்ல, அது செல்லாததாக்கப்பட்டு நீக்கறவு செய்யப்படுவதற்குரியதாகிறது.

6.1. நீதிப்பேராணை மனு எண் 8606/2010-இல் பிறப்பிக்கப்பட்ட 3.3.2017-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவை நீக்கறவு செய்து, உயர் நீதிமன்றத்தினால் அவமதிப்பு மனு தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதால், மறுஆய்வில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நீக்கறவு செய்ததன் அடிப்படையில் முடிவாக, நீதிப்பேராணை மனு எண் 8606/2010-இல் பிறப்பிக்கப்பட்ட 3.3.2017-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவை மீட்டளித்து, அவமதிப்பு மனுவின் தள்ளுபடி நீக்கறவு செய்யப்படவேண்டியுள்ளது. மேலும், சட்டப்படியாகவும், அதற்குரிய நற்கூறுகளின்பேரிலும் வழக்கை புதிதாக தீர்வு செய்வதற்கு அது உயர் நீதிமன்றத்திற்கு திருப்பி அனுப்பப்படவேண்டியுள்ளது.

6.2. அதுபோல், நீதிப்பேராணை மனு (எம்.டி.) எண் 14847/2017-ஐயும் நீதிப்பேராணை மனு (எம்.டி.) எண். 16256/2017-ஐயும் தள்ளுபடி செய்யும் உத்தரவும்

செல்லாததாக்கப்பட்டு நீக்கறவு செய்யப்படவேண்டும். மேற்படி நீதிப்பேராணை மனுக்கள் சட்டப்படியாகவும், அதற்குரிய நற்கூறுகளின்பேரிலும் புதிதாக தீர்வு செய்வதற்கு உயர் நீதிமன்றத்திற்கு திருப்பி அனுப்பப்படவேண்டும்.

7. மேற்படியானவற்றையும் மேற்சொன்ன காரணத்தையும் கருத்திற்கொண்டு, மறுஆய்வு மனு (எம்.டி.) எண் 21/2017-இல் 29.6.2021-இல் வழங்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழும் உரிமையியல் மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது மற்றும் அதன் உத்தரவு (மறுஆய்வு உத்தரவு) இதன்மூலம் செல்லாததாக்கப்பட்டு நீக்கறவு செய்யப்படுகிறது, மேலும், நீதிப்பேராணை மனு (எம்.டி.) எண் 8606/2010-இல் வழங்கப்பட்ட 3.3.2017-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவு மீட்டளிக்கப்படுகிறது.

அதன்விளைவாக, நீதிப்பேராணை மனு (எம்.டி.) எண் 14847/2017, நீதிப்பேராணை மனு (எம்.டி.) எண் 16256/2017 ஆகியவற்றின் தள்ளுபடியிலிருந்தும் மற்றும் அவமதிப்பு மனு (எம்.டி.) எண் 1109/2017-இன் தள்ளுபடியிலிருந்தும் எழுகின்ற எஞ்சிய மேல்முறையீடுகளும் அனுமதிக்கப்பட்டு, மேற்படி தள்ளுபடி உத்தரவுகள் இதன்படி செல்லாததாக்கப்பட்டு நீக்கறவு செய்யப்படுகின்றன. நீதிப்பேராணை மனு (எம்.டி.) எண் 14847/2017, நீதிப்பேராணை மனு (எம்.டி.) எண் 16256/2017 மற்றும் அவமதிப்பு மனு (எம்.டி.) எண் 1109/2017 ஆகியவை சட்டப்படியாகவும், அதற்குரிய நற்கூறுகளின்பேரிலும் புதிதாக தீர்வு செய்வதற்காக உயர் நீதிமன்றத்திற்கு திருப்பி அனுப்பப்படுகின்றன, இவற்றில் இந்நீதிமன்றம் எந்தத் தரப்பினர்களுக்கும் ஆதரவாக எதுவும் கூறியிருக்கவில்லை.

மேற்சொன்ன அளவுக்கேற்ப தற்போதைய மேல்முறையீடுகள் அனுமதிக்கப்படுகின்றன. வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி செலவுத் தொகை குறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படமாட்டாது.

**மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர். ஷா**

**மாண்புமிகு நீதியரசர் திரு. சி.டி. ரவிகுமார்**

**புது தில்லி,**
*24.02.2023.*

---

**<u>பொறுப்புதுறப்பு</u>**

*"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."*